செ.வெ. எண்: 066 நாள்:03.02.2017

# செய்தி வெளியீடு

தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சென்னையில் தலைமை அலுவலகத்தை கொண்டு 5 மண்டல அலுவலகங்கள், 36 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் 15 ஆய்வகங்களுடன் 700 பணியாளர்களைக் கொண்டு சீரிய முறையில் தமிழ் நாட்டின் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக செயல்பட்டு வருகின்றது. வாரியத்தில் பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்ப நலனை பாதுகாப்பதிலும் வாரியம் கனிவுடன் செயலாற்றுகின்றது. அதன் ஒரு பகுதியாக சென்னை மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகத்தில் வானவியலாளராக பணிபுரிந்த திரு.எஸ்.சரவணபவன் என்பவர் பணிக்காலத்தில் உயிரிழந்ததால் அவரது மகன் திரு.S.B. கிரிபிரசாத் அவர்களிடமிருந்து பெறப்பட்ட கருணை அடிப்படையிலான பணி வழங்க கோரும் விண்ணப்பத்தினை கனிவுடன் பரிசீலித்து அன்னார்க்கு, அவரின் கல்வித்தகுதி அடிப்படையில் தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தில் களப்பணி உதவியாளர் பதவி கருணை அடிப்படையில் வழங்கப்படுகின்றது. இதற்கான பணி நியமன ஆணையை 03.02.2017 அன்று மாண்புமிகு சுற்றுச் சூழல் துறை அமைச்சர் திரு.K.C.கருப்பணன் அவர்கள் தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள். இந்நிகழ்வின் போது தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தலைவர் மற்றும் அரசு முதன்மை செயலாளர் திரு.அதுல்ய மிஸ்ரா மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய உறுப்பினர் செயலர் திரு.நா.சுந்தரகோபால் அவர்களும் உடனிருந்தனர்.

வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.